இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு (பட்டிருப்பு வலய, மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்ட 1 AB, 1C, வகை - 2 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு) The involvement of parents in enhancing the knowledge of students who excel in learning

ஒய். அகல்யா | Y.Ahalya [1] , பி.சோபா | B.Soba [2]

Department of Education & Childcare, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

yrahalya@gmail.co, sobab@esn.ac.lk

DOI: 10.5281/zenodo.10222662

ஆய்வுச்சுருக்கம்

“மெல்லக்கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு” எனும் தலைப்பில் அமைந்த இவ் அளவை நிலை ஆய்வின் முக்கிய நோக்கம் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் பெற்றோர் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான விதந்துரைப்புக்களை முன்மொழிவதாகும். இக்கோட்டத்தின் பட்டிருப்பு வலயத்திலுள்ள 37 பாடசாலைகளிலிருந்து வசதி மாதிரி எடுப்பின் மூலம் பத்துப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றில் 1AB பாடசாலை ஒன்றும் 1C பாடசாலைகள் ஐந்தும் வகை-2 பாடசாலைகள் நான்கும் உள்ளடங்குகின்றன. நோக்க மாதிரியின் அடிப்படையில் பத்து அதிபர்களும் படையாக்க மாதிரி முறையின் அடிப்படையில் 5:1 எனும் விகிதத்தில் 51 ஆசிரியர்களும் 3:1 எனும் விகிதத்தில் 103 மெல்லக் கற்கும் மாணவர்களும் இம் மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு 2:1 எனும் விகிதத்தில் 52 பெற்றோர்களும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணம் போன்ற ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் தரவுகள், தகவல்கள் பெறப்பட்டு அவை பண்பு ரீதியாக மற்றும் அளவு ரீதியாக Microsoft Excel படி முறைகளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, வியாக்கியானமும் கலந்துரையாடலும் இடம்பெறுகின்றது. தரவுப்பகுப்பாய்வு முறை மூலம் பெறப்பட்ட ஆய்வு முடிவுகளாக பெற்றோரின் கவனயீனம், ஒத்துழையாமை, வேலைக்கு அமர்த்துதல், தண்டனை வழங்குதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. அதன்படி மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளது கற்றலில் அர்ப்பணிப்பின்றி செயற்படும் நிலை அதிகமாக இடம்பெறுவது கண்டறியப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பெற்றோரின் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளை குறைக்கும் நோக்கில் விதந்துரைப்புக்களும் இவ்வாய்வினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

Abstract: *Literary works, defined as moral literature through poetry, flourished during the Kalaprara period. These writings often embraced Jain and Buddhist ideologies, prominently featuring the theory of impermanence. Within these texts, there is a distinct condemnation of sexual activities, portraying the feeling of love, known as Kama, as an instrument of evil. In contrast to Sangam literature, which revered Kama as a deity (Kaman), this literature deemed it as Kama and rejected it outright. There is a notable aversion even to natural sexual activities. Unlike Sangam literature, which extensively explored the myth*

of 'Kaman,' the literature of this period has dealt with it sparingly, particularly in the context of moral teachings.

திறவுச் சொற்கள் (*Keywords*) :- மெல்லக் கற்கும் மாணவர்கள், கற்றல் மேம்பாடு, பெற்றோர் பங்களிப்பு, *slow learners, learning development, parental involvement*

1.0 அறிமுகம்

1.1 ஆய்வின் அறிமுகம்

அனைவருக்கும் கல்வி என்ற சிந்தனை தற்காலத்தில் பிரபல்யமாக பேசப்படுகின்ற ஒன்றாகும். இதனடிப்படையில் கல்வியானது அனைவருக்கும் கிடைக்கப் பெற வேண்டியது அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டே இன்று அதிகமான பாடசாலைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்கள், சாதாரண மாணவர்களுடன் இணைந்து வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

இந்நிலையில் தற்போதைய பட்டிருப்பு வலய, மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டப் பாடசாலைகளில் கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் கல்வி கற்கும் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு தங்களது பெற்றோர்களின் கல்விசார் உறுதுணை போதாத நிலையில் உள்ளது. இதனால் கனிஷ்ட இடைநிலை வகுப்புகளில் மெல்லக் கற்கும் மாணவர்களிடையே பொதிந்துள்ள ஆற்றல்கள், திறன்கள், உணர்வுகள், அவர்களின் நடத்தைகள் மற்றும் கற்றல் மேம்பாடுகள் அசமந்த நிலையில் காணப்படுகின்றன. வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் சாதாரண பிள்ளைகளுடன் மெல்லக் கற்கும் பிள்ளைகளையும் இணைத்துக் கற்பிக்கும் போது மெல்லக் கற்கும் மாணவர்கள் மீது கவனம் செலுத்துவது மிகவும் குறைவாகும். வீட்டில் பெற்றோரின் ஆதரவின்மையால் பொருத்தமான கற்றல் நடைமுறையின்றி மாணவர்கள் மெல்லக் கற்கும் நிலை தொடர்கின்றது.

கல்விச் செயற்பாடுகளில் பெற்றோரின் வகிபங்கு புதியதொரு விடயம் அல்ல. பிள்ளைகளின் உளவிருத்தி, உடல் விருத்தி, வாழ்க்கைப் பழக்க வழக்கங்கள், கலாசாரம் பற்றிய அடிப்படை விளக்கங்கள், மொழிவிருத்தி, கல்வி மூலம் பெறப்படும் தொழில்சார் அறிவு போன்றவற்றினை பிள்ளைக்கு வழங்குவதில் பெற்றோர் முக்கிய பங்கினை கொண்டு காணப்படுகின்றனர். அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கற்றல் இயலாமைக்கு பாடசாலையினையே குறை கூறுகின்றனர் (Band, 2004).

குடும்பத்தின் வறுமை, பருமன், தொழில் இன்மை முதலியன மாணவர்களின் கல்வி நிலையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. குடும்பத்தின் வருமானம் திருப்திகரமாக இல்லையெனில் பிள்ளையின் தேவையினை நிறைவு செய்வது கடினமாகிறது. பெற்றோர் பிள்ளைகளுக்கு போதிய வழிகாட்டாமை, தேவைகள் பூர்த்தி செய்யாமையால் பிள்ளைகள் ஒழுக்கமற்ற நடத்தைகளுக்கும் உள்ளாகின்றனர் (Porden, 2001).

ஆகையால் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலினை மேம்படுத்துவதில் முக்கியத்துவம் கொண்டவர்களாக பெற்றோர் காணப்படுகின்றனர். அதன் அடிப்படையில் மெல்லக் கற்கும் மாணவர்களின்; கற்றலை உயர்த்துவதற்கும் அவர்களின் எதிர்காலத்தை செம்மைப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டு இவ் ஆய்வுப்பிரச்சினைத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஆய்வினை முறையாக முன்னெடுப்பதன் மூலம் மெல்லக் கற்கும் மாணவர்களது கற்றலுக்கு பொருத்தமான தீர்வுகள் கிடைக்கும் என்கின்ற அடிப்படையிலும் எதிர்காலத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு, பெற்றோர்களின் பங்களிப்பினை நேர்த்தியாக பெற்றுக்கொடுக்க முடியும் என்பதும் ஆய்வாளனது நம்பிக்கையாகும்

1.2 ஆய்வுப்பிரச்சினை

மெல்லக் கற்கும் பிள்ளைகளின் பெற்றோர் தமது பிள்ளைகள் மீது வெறுப்புணர்வுடன் நடந்து கொள்ளுதல், குறைபாடுகளை மாத்திரம் சுட்டிக்காட்டுதல், மெல்லக்கற்கும் பிள்ளையென முத்திரை

பதித்தல், ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டு இழிவுபடுத்துதல், சிறு பிழைகளுக்கு தண்டித்தல், திட்டுதல், அன்பு செலுத்தாது புறக்கணித்தல், கௌரவக் குறைவாக எண்ணுதல், போன்றவற்றை வெளிப்படுத்துகின்றனர். பெற்றோரது இத்தகைய செயற்பாடுகளால் பிள்ளைகள் தாழ்வு மனப்பாங்கை அடைவதுடன் உளவியல் தாக்கத்திற்கும் உள்ளாகின்றனர் (Holden,2002). பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே சிறந்த அணுகுமுறை இன்மையால் ஆளுமைப் பின்னடைவு, மனவெழுச்சிப் பின்னடைவு, கற்றல் செயற்பாடுகளில் பின்னடைவு போன்றவற்றை பிள்ளைகள் எதிர்நோக்குகின்றமை முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது. பிள்ளைகளை உறவினர்களிடம் ஒப்படைத்து விட்டு தாய், தந்தையர் வெளிநாட்டிற்கு செல்வதும் உள்நாட்டினுள் வேலைக்குச் செல்வதும் அதிகரித்துள்ளது. பெற்றோர்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்திக்காது செயற்படுகின்றனர். பெற்றோரின் அரவணைப்பும் பாதுகாப்பும் இன்றி பிள்ளைகள் பிறரை நம்பி வாழும் நிலை காணப்படுகின்றது. உறவினர்களால் வீட்டு வேலைக்கு அமர்த்துதல், பாலியல் சீண்டல்கள், தண்டனை வழங்குதல், அடிமையாக்குதல், சிறைப்படுத்துதல் அவமானப்படுத்துதல், உளவியல் ரீதியாக தாக்குதல் போன்றவற்றுக்கு பிள்ளைகள் பலியாகின்றனர் (Nelsen, 2008). ஆகையால் பிள்ளைகளது வாழ்க்கை பாதுகாப்பின்றி சிதறடிக்கப்படவும் கற்றலில் பின்னடைவை எதிர்கொள்ளவும் பெற்றோர் காரணமாகின்றமை முக்கிய பிரச்சினையாகும்.

1.2.1 ஆய்வுப்பிரச்சினைக் கூற்று

மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோர் பங்களிப்பற்றவர்களாகக் காணப்படுகின்றமையால் மெல்லக் கற்கும் மாணவர்களது வினைத்திறனான கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன.

1.3 ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்

மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளை கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.

1.2.1 ஆய்வுப்பிரச்சினைக் கூற்று

மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட வகுப்புக்களில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோர் பங்களிப்பற்றவர்களாகக் காணப்படுகின்றமையால் மெல்லக் கற்கும் மாணவர்களது வினைத்திறனான கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன.

1.3 ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்

வகுப்புகளில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளை கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.

1.3.1 சிறப்பு நோக்கங்கள்

1. இடைநிலை வகுப்புக்களிலுள்ள மெல்லக் கற்கும் மாணவர்களின் தற்போதய நிலையினை இனங்காணல்.
2. இடைநிலை வகுப்புக்களிலுள்ள மெல்லக் கற்கும் மாணவர்கள்இ மெல்லக் கற்பதற்கான காரணங்களை கண்டறிதல்.
3. இடைநிலை வகுப்புக்களிலுள்ள மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோரின் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளை பகுப்பாய்வு செய்தல்.
4. இடைநிலை வகுப்புக்களில் உள்ள மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் வகையில் பெற்றோருக்கான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் முன்வைத்தல்.

2.0 இலக்கிய மீளாய்வு

ஒரு வகுப்பறையில் சாதாரண குழந்தைகளிடையே மெதுவாக கற்கும் பிள்ளைகள் அடையாளம் காண்பது கடினமான பணியாகும். ஏனெனில் குறைந்த நுண்ணறிவு உள்ள குழந்தைகளின் கல்வியை விட பிற நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்படுகின்றனர். மெதுவாக கற்பவர்கள் மாதிரியினை தெரிவு செய்வதற்கு ஆராய்ச்சியாளர்கள் சோதனை கவனிப்பு முறை, சாதனை அளவீடு, ஆளுமை பட்டியல் முறையினை பயன்படுத்துகின்றனர் (Korojana,2008).

பணக்கார பெற்றோரும் ஏழைப் பெற்றோரும் காலையில் வேலைக்கு சென்று விட்டு இரவு வெகு நேரம் தங்கள் குழந்தைகளுடன் நேரம் செலவிட முடியாதிருக்கின்றனர். இத்தகைய பெற்றோருக்கு பிள்ளைகளை கண்காணிக்க நேரமில்லை. பிள்ளைகளின் கற்றல் செயல்முறையில் தடைகளை விளைவிக்கும் காரணியாக இத்தகைய பெற்றோர் அமைகின்றனர் (Appaji, 2020).

பிள்ளைக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வாங்கி கொடுக்காமை, கவனமின்மை, கல்வியின் முக்கியத்துவத்தை உணராமை, பிள்ளையின் செயற்பாடு பற்றிய கவனம் செலுத்தாமை, பிரிந்து வாழுதல், விவாகரத்து பெறுதல், மதுபாவனை, வெளிநாடு செல்லுதல், வேலைப்பளு முதலிய காரணிகள் பிள்ளைகள் கல்வி அபிவிருத்திக்கு தடையாக அமைகின்றன. பெற்றோரின் பங்களிப்பால் பிள்ளையின் கற்றலில் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்த முடியும் (Sandler, 1997).

பிள்ளைகளுக்கு மதிப்பளித்து அவர்களின் விருப்பு,வெறுப்புகளை விளங்கிக்கொண்டு மாணவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப முடிவுகளை பெற்றோர் எடுக்கவேண்டும். கற்றலை அதிகரித்தல், ஊக்குவித்தல், வழிகாட்டல்களையும் பெற்றோர் மேற்கொள்ள வேண்டும் (Borby,2015).

3.0 ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியல் சிறப்பாக அமையும் பட்சத்தில் தீர்வுகள் நம்பகத்தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும் பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண்ரீதியான முறையியல்களுள் எண்கள், அட்டவணைகள், மாணவர் தொகை என்பன உள்ளடங்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகின்றது.

ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான உறுதிப்படுத்தல்களுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இத்துடன் சம்பத்தப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள், மெல்லக் கற்கும் மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நேரடி அவதானம் மூலமாகவும் பெற்றோர்கள், அதிபர்களிடம் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கவனத்திற்கொள்ளப்பட்டன. இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்களை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலமாக முடிவுகளை கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக காணப்படுகின்றது.

3.1 மாதிரித் தெரிவு

"மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு." எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வை மேற்கொள்வதற்கு ஆய்வாளரினால் நோக்க மாதிரி, படையாக்க மாதிரி, வசதி மாதிரி எடுப்பு முறைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதன்படி இவ்வாய்வின் பிரதேசமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டிருப்பு வலய, மண்முனை தென் எருவில் பற்று கோட்டத்தில் 37 பாடசாலைகள் காணப்படுகின்றன. எனினும் பாடசாலைக்கு இடையேயான தூரம், அதிக குடித்தொகை, செலவு முதலிய வசதிகளை கருத்தில் கொண்டு 37 பாடசாலைகளில் ஆய்வாளரின் வசதிக்கு ஏற்ப, வசதி மாதிரி முறை மூலம் 10 தமிழ் கலவன் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.


இடைநிலைப் பிரிவில் 1605 மாணவர்கள் காணப்படுகிறார்கள். இவர்களில் 311 மெல்லக்கற்கும் மாணவர்களிலிருந்து படையாக்க மாதிரி முறையின் அடிப்படையில் 3:1 விகிதத்தில் 103 மெல்லக் கற்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இம் மெல்லக் கற்கும் மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு இலகு எழுமாறாக 2:1 எனும் விகிதத்தில் 52 பெற்றோரும் தெரிவு

செய்யப்பட்டனர். அத்துடன் 271 மொத்த ஆசிரியர்களிலிருந்து 5:1 எனும் விகிதத்தில் 51 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வின் நோக்கம் கருதி 10 பாடசாலைகளின் அதிபர்களிடம் தகவல் பெற்றுக்கொள்ளும் வகையில், நோக்க மாதிரியில் 10 பாடசாலைகளின் அதிபர்கள் 10 பேரும்; தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மொத்தமாக 216 பேர் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

4.0 தரவுப்பகுப்பாய்வு

4.1 கற்றலில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கவனம்

பாடசாலையில் வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது மெல்லக்கற்கும் மாணவர்களின் கவனம் தொடர்பாக ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது மிக நன்று, நன்று பதிலை எவரும் முன்வைக்கவில்லை. சாதாரணம் பதிலை 28 ஆசிரியர்கள் கூறினர். இது 55 சதவீதமாகக் காணப்படுகின்றது. குறைவு என்ற பதிலை 17 ஆசிரியர்கள் கூறினர். இது 33 சதவீதமாகக் காணப்படுகின்றது. மிகக் குறைவு பதிலை 6 ஆசிரியர்கள் கூறினர். இது 12 சதவீதமாகக் காணப்படுகின்றது. இதனை பினவரும் உரு 4.1 காட்டுகின்றது.



உரு 4.1 கற்பித்தலில் மாணவர்களின் கவனம்


4.2 கற்றல் கற்பித்தலில் உடலியல் குறைபாடுகள் ஏற்படுத்தும் தாக்கம்

அங்கவீனம், குறைபாடுகள் கற்றல் கற்பித்தலில் ஏற்படுத்துகின்ற தாக்கம் தொடர்பாக மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் ஆய்வுக் கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் அங்கவீனம் அல்லது குறைபாடுகள் இருப்பதால் உங்களது கற்றல் செயற்பாடுகளில் தாக்கம் ஏற்படுகின்றதா? என மாணவர்களிடம் வினவப்பட்டபோது ஆம் என 17 மாணவர்கள் கூறினர். இது 77 சதவீதமாகும். ஓரளவு என 5 மாணவர்கள் கூறினர். இது 23 சதவீதமாகும். இல்லை என எவரும் முன்வைக்கவில்லை.

இதேபோன்று ஆசிரியர்களிடம் வினவியபோது ஆம் என 8 ஆசிரியர்கள் கூறினர். இது 72 சதவீதமாகும். ஓரளவு என 3 ஆசிரியர்கள் கூறினர். இது 27 சதவீதமாகும். இல்லை என எவரும் கூறவில்லை. இதேபோன்று பெற்றோர்களிடம் வினவப்பட்டபோது ஆம் என 11 பெற்றோர்கள் கூறினர். இது 73 சதவீதமாகும். ஓரளவு என 4 பெற்றோர்கள் கூறினர். இது 27 சதவீதமாகும். இல்லை என எவரும் குறிப்பிடவில்லை.

அத்துடன் ஆய்வாளரினால் நேரடி அவதானம் மூலம் விசேட நோய் கொண்ட மெல்லக்கற்கும் மாணவர்கள் கற்கும் வகுப்பறைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டன. இதன்போது 80 சதவீதமான பிள்ளைகள் சிரமத்தினை எதிர்கொள்கின்றார்கள் என்பதனையும் 20 சதவீதமான பிள்ளைகள் ஓரளவு சிரமத்தினை எதிர்கொள்கின்றார்கள் என்பதனையும் அவதானிக்க முடிந்தது. இவற்றை பின்வருமாறு காட்டலாம்.

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly




உரு 4.2 மெல்லக் கற்கும் மாணவர்களின் உடலியல் குறைபாடு

4.3 பிள்ளைகளுக்கு தண்டனை வழங்குதல்

கற்கும் போது குறைபாடுகளை வெளிப்படுத்தினால் பெற்றோர் தண்டனை வழங்குகின்றரா? என ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்களிடம் வினவியபோது 103 மாணவர்களில் ஆம் என 45 மாணவர்கள் கூறினர். இது 44 சதவீதமாகும். 34 மாணவர்கள் இல்லை எனக்கூறினர். இது 33 சதவீதமாகும். 24 மாணவர்கள் ஓரளவு எனக்கூறினர். இது 23 சதவீதமாகும். அவ்வாறே 51 ஆசிரியர்களிடம் வினவியபோது 31 ஆசிரியர்கள் ஆம் எனக்கூறினர். இது 61 சதவீதமாகும். 18 ஆசிரியர்கள் இல்லை எனக்கூறினர். இது 35 சதவீதமாகும். 2 ஆசிரியர்கள் ஓரளவு எனக்கூறினர். இது 4 சதவீதமாகும். அவ்வாறே 52 பெற்றோர்களிடம் வினவியபோது 14 பெற்றோர்கள் ஆம் எனக்கூறினர். இது 27 சதவீதமாகும். 20 பெற்றோர்கள் இல்லை எனக்கூறினர். இது 38 சதவீதமாகும். 18 பெற்றோர்கள் ஓரளவு எனக்கூறினர். இது 35 சதவீதமாகும்.

இத்தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்போது ஆய்வுக்குட்படுத்திய பிரதேசங்களில் குறைபாடுகளை வெளிக்காட்டும் போது பெற்றோர்கள்இ மெல்லக்கற்கும் பிள்ளைகளுக்கு தண்டனை வழங்குகின்றனர் என்பதனை அறியலாம். இதனை பின்வரும் உரு 4.3 காட்டுகின்றது.



உரு 4.3 மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பெற்றோர் தண்டனை வழங்குதல்

4.4 பரிகாரக் கற்பித்தல் வழங்குதல்


கற்றல், கற்பித்தலில் பரிகாரக் கற்பித்தலானது பிரதானமாகும். சதாரண மாணவர்களை விட விசேட தேவைகள்சார் பிள்ளைகளது கற்றலுக்கு பரிகாரக் கற்பித்தல் செல்வாக்குச் செலுத்துகின்றது. பரிகாரக் கற்பித்தல் மூலம் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் விருத்தியடையும். அந்தவகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீரா? என மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள்,பெற்றோர்களிடம் வினவப்பட்டது.

அந்தவகையில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீரா? என மாதிரிகளாகத்

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

தெரிவு செய்யப்பட்ட 52 மொத்த பெற்றோர்களிடம் வினவியபோது 48 பெற்றோர்கள் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 92 சதவீதமாகக் காணப்படுகின்றது. 4 பெற்றோர்கள் ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 8 சதவீதமாகக் காணப்படுகின்றது. பூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை என எவரும் குறிப்பிடவில்லை. அவ்வாறே மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 103 மாணவர்களிடம் வினவியபோது 80 மாணவர்கள் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக் கூறினர். இது 78 சதவீதமாகக் காணப்படுகின்றது. ஏற்றுக்கொள்கின்றேன் என 23 மாணவர்கள் கூறினர். இது 22 சதவீதமாகும். பூரணமாக ஏற்கவில்லை என எவரும் குறிப்பிடவில்லை.

அவ்வாறே மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 51 ஆசிரியர்களிடம் வினவியபோது 45 ஆசிரியர்கள் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 88 சதவீதமாகக் காணப்படுகின்றது. ஏற்றுக்கொள்கின்றேன் என 6 மாணவர்கள் கூறினர். இது 12 சதவீதமாகும். பூரணமாக ஏற்கவில்லை என எவரும் குறிப்பிடவில்லை. இதேபோன்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 10 அதிபர்களிடம் வினவியபோது 10 அதிபர்களும் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 100 சதவீதமாகக் காணப்படுகின்றது. அதன்படி மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தலை அதிகமானோர் பூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இவற்றை பின்வரும் உரு 4.4 காட்டுகின்றது



உரு 4.4 மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தலை வழங்குதல்

5.0 முடிவுகளும் விதந்துரைப்புக்களும்

5.1 இடைநிலை வகுப்புக்களில் உள்ள மெல்லக்கற்கும் மாணவர்களின் தற்போதைய நிலையினை இனங்காணல்

முடிவுகள்

1. மெல்லக் கற்கும் மாணவர்கள் பாடசாலை மட்டத்திலும் வீட்டிலும் கற்பதில் அசமந்தப் போக்கினை வெளிக்காட்டுவதுடன் கற்பதற்கு குறைவான விருப்பத்தினைக் கொண்டுள்ளமையினை 57%ஆன மாணவர்களும் 62%ஆன பெற்றோர்களும் 50% ஆன அதிபர்களும் 48% சதவீதமான ஆசிரியர்களும் வெளிப்படுத்திய பதில்களின் மூலமாக அறிய முடிகின்றது.
2. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், வரலாறு போன்ற பாடங்களை கற்பதில் மெல்லக் கற்கும் மாணவர்கள் சிரமத்தினை எதிர் கொள்கின்றனர் என்பதனை 71% ஆன மாணவர்களும் 76% ஆன ஆசிரியர்களும் 79% ஆன பெற்றோர்களும் 80% ஆன அதிபர்களும் கூறிய கருத்துக்களின் மூலமாக அறிய முடிகின்றது.
3. மெல்லக் கற்கும் மாணவர்கள் மொழித்திறனில் பின்னடைவான மாணவர்களாக காணப்படுகின்றமையை 44% ஆன பெற்றோர்களின் கருத்துக்கள் உறுதி செய்கின்றன.
4. மெல்லக் கற்கும் மாணவர்கள் பாட விடயம் சார்ந்த செயற்பாடுகளை விட இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அதிக நாட்டத்தை வெளிக்காட்டுகின்றமையை 65%

ஆன மாணவர்களும் 71% ஆன பெற்றோர்களும் 65% ஆசிரியர்களும் 60% ஆன அதிபர்களும் வழங்கிய தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

விதந்துரைப்புக்கள்

1. மெல்லக் கற்கும் பிள்ளைகள் கற்பதற்கு விருப்புக் கொள்ளும் வகையில் பொருத்தமானவாறு வீட்டுச் சூழலை உருவாக்கி, கற்கும் இடத்தினை ஈர்க்குமாறு தயார் செய்து கற்றலுக்குத் தேவையான வளங்களை வழங்குதல் வேண்டும்.
2. பிரதான பாடங்களான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், வரலாறு முதலிய பாடங்கள் ஒவ்வொன்றையும் முயற்சியுடன் பிள்ளைகள் கற்பதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
3. கணிதம், ஆங்கிலம் முதலிய கடின பாடங்களை விளையாட்டுக்கு ஊடாக பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு பெற்றோர் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.
4. பயிற்சி வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதுடன் பிள்ளைகளை மேற்பார்வை செய்து வழிப்படுத்தல் வேண்டும்.
5. மாணவர்களின் எழுதுதல், வாசித்தலில் பாட ஆசிரியர்களும் பெற்றோர்களும் கரிசனை காட்டுவது அவசியமாகும்.
6. மொழித்திறன் பின்னடைவான பிள்ளைகளுக்கு பரிகாரக் கற்பித்தல் முறையினை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.
7. எழுதுதல் பின்னடைவான பிள்ளைகளுக்கு வீட்டில் மணல் பரப்பிய தட்டுக்கள் மூலமாக எழுத்து பயிற்சியினை பெற்றோர் வழங்கவேண்டும். களி முதலிய பொருட்களில் விளையாட செய்வதனால் பிள்ளைகளின் விரல்கள் எழுத்துக்களை எழுதுவதற்கு இயைபாக்கம் பெறும். அத்துடன் பிள்ளைகள் எழுதுவதற்கு இலகுவான கைபிடிகொண்ட பென்சில்கள், பேனைகளை வழங்குவதனாலும் பிள்ளைகளின் எழுத்துத் திறனை வளர்க்க முடியும். இவற்றை பெற்றோர் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.
8. பரீட்சைக்கு மாத்திரம் தயார்படுத்தும் வகையில் பிள்ளைகளுக்கு திணிப்புக்கல்வியினை வழங்காது இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இணைந்து செயற்படுவதற்கு ஊக்குவித்தல் வேண்டும்.
    - இணைப்பாடவிதான செயற்பாடுகள் பிள்ளைகளின் கற்றலை பாதிக்கும் என தவறாக எண்ணும் மனநிலையை பெற்றோர் கைவிட வேண்டும்.
    - பிள்ளைகளின் திறனை கண்டறிந்து திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல் அவசியமாகும்.

5.2 இடைநிலை வகுப்புக்களில் உள்ள மெல்லக்கற்கும் மாணவர்கள் மெல்லக்கற்பதற்கான காரணிகளை கண்டறிதல்

முடிவுகள்

1. மெல்லக்கற்கும் மாணவர்கள் 21% ஆனவர்கள் விசேட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை 29%ஆன பெற்றோர்களும் 22% ஆசிரியர்களும் வெளிப்படுத்திய தகவல்கள் உறுதி செய்கின்றது.
2. வீட்டுச் சூழலில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலுக்கான உதவிகள் கிடைப்பதில்லை என 45% ஆன மாணவர்களும் 55% ஆன ஆசிரியர்களும் 58% பெற்றோர்களும் கூறிய கருத்துக்கள் உறுதி செய்கின்றன.
3. மெல்லக் கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கு சீராக வருகை தருவதில்லை என்பதனை 63% ஆன ஆசிரியர்கள் கூறிய பதில்கள் மூலமாக அறியலாம்.
4. இடர்காலச் சூழலின் போது மெல்லக் கற்கும் மாணவர்கள் கற்பதற்கு தாய், தந்தையருக்கு போதிய கல்வி அறிவும் தொழிநுட்ப அறிவும் இன்றிக் காணப்படுகின்றது என்பதனை 36% ஆன மாணவர்களும் 39% ஆன ஆசிரியர்களும் 35% ஆன பெற்றோர்களும் கூறிய தகவல்கள் உறுதி செய்கின்றது.

விதந்துரைப்புக்கள்

1. விசேட தேவையுடைய பிள்ளைகளை கற்றலில் இருந்து ஒதுக்காது உள்ளடங்கல் கல்வி மூலம் அனைவரையும் ஒன்றிணைத்து கற்றல் கற்பித்தலை வழங்க வேண்டும்.
2. வீட்டில் எவ்வகையான கஷ்டம் ஏற்படினும் தாய்மார் பிள்ளைகளை தனித்து விட்டு வெளிநாடு செல்வதை தவிர்க்க வேண்டும்.
3. மெல்லக் கற்கும் பிள்ளைகளின் குடும்பப் பின்னணி, வறுமையுடையதாக காணப்படினும் வறுமை மற்றும் இல்லாமையை பிள்ளைகள் மீது சுமத்துவதனை தவிர்க்க வேண்டும்.
4. கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்கள் மின்சார வசதி, நவீன தொழில்நுட்ப வசதி, திறன்பேசி வசதியின்றிக் காணப்படும் போதிலும் தமது பிள்ளைகளின் நலனை கருத்தில் கொண்டு அருகில் உள்ள பிள்ளைகளுடன் இணைந்து கற்றலை வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்.

விதந்துரைப்புக்கள்

1. மெல்லக் கற்கும் பிள்ளைகள் கற்பதற்கு விருப்புக் கொள்ளும் வகையில் பொருத்தமானவாறு வீட்டுச் சூழலை உருவாக்கி, கற்கும் இடத்தினை ஈர்க்குமாறு தயார் செய்து கற்றலுக்குத் தேவையான வளங்களை வழங்குதல் வேண்டும்.
2. பிரதான பாடங்களான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், வரலாறு முதலிய பாடங்கள் ஒவ்வொன்றையும் முயற்சியுடன் பிள்ளைகள் கற்பதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
   - கணிதம், ஆங்கிலம் முதலிய கடின பாடங்களை விளையாட்டுக்கு ஊடாக பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு பெற்றோர் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.
   - பயிற்சி வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதுடன் பிள்ளைகளை மேற்பார்வை செய்து வழிப்படுத்தல் வேண்டும்.
3. மாணவர்களின் எழுதுதல்இ வாசித்தலில் பாட ஆசிரியர்களும் பெற்றோர்களும் கரிசனை காட்டுவது அவசியமாகும்.
   - மொழித்திறன் பின்னடைவான பிள்ளைகளுக்கு பரிகாரக் கற்பித்தல் முறையினை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.
   - எழுதுதல் பின்னடைவான பிள்ளைகளுக்கு வீட்டில் மணல் பரப்பிய தட்டுக்கள் மூலமாக எழுத்து பயிற்சியினை பெற்றோர் வழங்கவேண்டும். களி முதலிய பொருட்களில் விளையாட செய்வதனால் பிள்ளைகளின் விரல்கள் எழுத்துக்களை எழுதுவதற்கு இயைபாக்கம் பெறும். அத்துடன் பிள்ளைகள் எழுதுவதற்கு இலகுவான கைபிடிகொண்ட பென்சில்கள், பேனைகளை வழங்குவதனாலும் பிள்ளைகளின் எழுத்துத் திறனை வளர்க்க முடியும். இவற்றை பெற்றோர் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.
4. பரீட்சைக்கு மாத்திரம் தயார்படுத்தும் வகையில் பிள்ளைகளுக்கு திணிப்புக்கல்வியினை வழங்காது இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இணைந்து செயற்படுவதற்கு ஊக்குவித்தல் வேண்டும்.
   - இணைப்பாடவிதான செயற்பாடுகள் பிள்ளைகளின் கற்றலை பாதிக்கும் என தவறாக எண்ணும் மனநிலையை பெற்றோர் கைவிட வேண்டும்.
   - பிள்ளைகளின் திறனை கண்டறிந்து திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல் அவசியமாகும்.

5.2 இடைநிலை வகுப்புக்களில் உள்ள மெல்லக்கற்கும் மாணவர்கள் மெல்லக்கற்பதற்கான காரணிகளை கண்டறிதல்

முடிவுகள்

1. மெல்லக்கற்கும் மாணவர்கள் 21% ஆனவர்கள் விசேட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை 29% ஆன பெற்றோர்களும் 22%ஆசிரியர்களும் வெளிப்படுத்திய தகவல்கள் உறுதி செய்கின்றது.

2. வீட்டுச் சூழலில், மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலுக்கான உதவிகள் கிடைப்பதில்லை என 45% ஆன மாணவர்களும் 55% ஆன ஆசிரியர்களும் 58% பெற்றோர்களும் கூறிய கருத்துக்கள் உறுதி செய்கின்றன.
3. மெல்லக் கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கு சீராக வருகை தருவதில்லை என்பதனை 63% ஆன ஆசிரியர்கள் கூறிய பதில்கள் மூலமாக அறியலாம்.
4. இடர்காலச் சூழலின் போது மெல்லக் கற்கும் மாணவர்கள் கற்பதற்கு தாய்இ தந்தையருக்கு போதிய கல்வி அறிவும் தொழிநுட்ப அறிவும் இன்றிக் காணப்படுகின்றது என்பதனை 36% ஆன மாணவர்களும் 39% ஆன ஆசிரியர்களும் 35% ஆன பெற்றோர்களும் கூறிய தகவல்கள் உறுதி செய்கின்றது.

விதந்துரைப்புக்கள்

1. விசேட தேவையுடைய பிள்ளைகளை கற்றலில் இருந்து ஒதுக்காது உள்ளடங்கல் கல்வி மூலம் அனைவரையும் ஒன்றிணைத்து கற்றல் கற்பித்தலை வழங்க வேண்டும்.
2. வீட்டில் எவ்வகையான கஷ்டம் ஏற்படினும் தாய்மார் பிள்ளைகளை தனித்து விட்டு வெளிநாடு செல்வதை தவிர்க்க வேண்டும்.
3. மெல்லக் கற்கும் பிள்ளைகளின் குடும்பப் பின்னணி, வறுமையுடையதாக காணப்படினும் வறுமை மற்றும் இல்லாமையை பிள்ளைகள் மீது சுமத்துவதனை தவிர்க்க வேண்டும்.
4. கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்கள் மின்சார வசதி, நவீன தொழில்நுட்ப வசதி, திறன்பேசி வசதியின்றிக் காணப்படும் போதிலும் தமது பிள்ளைகளின் நலனை கருத்தில் கொண்டு அருகில் உள்ள பிள்ளைகளுடன் இணைந்து கற்றலை வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்.

5.3 இடைநிலை வகுப்புக்களில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோரின் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளை பகுப்பாய்வு செய்தல்

முடிவுகள்

1. பெற்றோர்கள் மெல்லக் கற்கும் மாணவர்களின் வெற்றிகளுக்கு பாராட்டுக்கள்இ பரிசில்கள் வழங்குவதில் நாட்டமின்றிக் காணப்படுகின்றமையை 46% ஆன மாணவர்களும் 60% ஆன ஆசிரியர்களும் 65% ஆன பெற்றோர்களும் வெளிப்படுத்திய கருத்துக்கள் உறுதி செய்கின்றன.
2. மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஓரளவு போசாக்குள்ள உணவுகளையே வழங்குகின்றனர் என்பதனை 49% மாணவர்களும் 74% ஆன ஆசிரியர்களும் 33% பெற்றோர்களும் கூறிய கருத்துக்கள் உறுதி செய்கின்றது.
3. மெல்லக்கற்கும் மாணவர்கள் கற்றல் குறைபாடுகளை வெளிக்காட்டும் போது அநேகமான பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தண்டனைகளை வழங்குகின்றனர் என்பதனை 44% ஆன மாணவர்களும் 61% ஆன ஆசிரியர்களும் 27% ஆன பெற்றோர்களும் கூறிய கருத்துக்கள் மூலம் அறிய முடிகின்றது.
4. மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலையுடன் தொடர்புகளை பேணுவதில் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனமையினை 37% ஆன மாணவர்களும் 46% ஆன ஆசிரியர்களும் 35% பெற்றோர்களும் 50% அதிபர்களும் வழங்கிய கருத்துக்கள் மூலம் அறிய முடிகின்றது.

விதந்துரைப்புக்கள்

1. மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த பாராட்டுக்கள், பரிசுகள் வழங்குவது அவசியமாகும்.
2. மெல்லக்கற்கும் பிள்ளைகளை பெற்றோர் கவனத்தில் கொள்ளாது விடாமல் பிள்ளைகளின் சிறுசிறு வெற்றிகளைக்கூட உடனுக்குடன் பாராட்டி ஊக்குவித்தல் அவசியமாகும்.
3. பொருளாதார பின்னடைவான குடும்பங்களாயின் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்க முடியாத நிலையில் பாராட்டுக்களை வழங்கி கௌரவிக்கலாம். அத்துடன் பிள்ளைகள் வெற்றியினை கூறும்போது அலட்சியம் செய்வதனை பெற்றோர் தவிர்ப்பது சிறந்தது.

4. பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் பெற்றோர் அசமந்த நிலையினைக் காட்டாது கவனமெடுத்து பிள்ளைகளுக்கு போதுமான போசாக்கு உணவுகளை வழங்குதல் அவசியம் ஆகும்.

5.4 இடைநிலை வகுப்புக்களில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோர்களுக்கான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் முன்வைத்தல்

முடிவுகள்

1. மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலுக்கு தேவையான வளங்களை பெற்றோர் பெற்றுக் கொடுத்தல் அவசியமாகும் என்பதனை 60% ஆன மாணவர்களும் 88% ஆன ஆசிரியர்களும் 81% ஆன பெற்றோர்களும் 80% ஆன அதிபர்களும் வழங்கிய தகவல்கள் மூலமாக அறியமுடிகின்றது.
2. பெற்றோர், பிள்ளைகளிடமுள்ள குறைகளை மாத்திரம் சுட்டிக்காட்டாது நிறைகளையும் கூறுதல் வேண்டும் என்பதனை 66% ஆன மாணவர்களும் 79% ஆன பெற்றோர்களும் வெளிப்படுத்திய கருத்துக்கள் உறுதி செய்கின்றன.
3. மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல்இ கற்பித்தல் செயற்பாடுகளின் போது பரிகாரக் கற்பித்தல் முறையை மேற்கொள்ள வேண்டும் என்பதனை 92% ஆன பெற்றோர்களும் 78% ஆன மாணவர்களும் 88% ஆன ஆசிரியர்களும் கூறிய கருத்துக்கள் மூலமாக அறிய முடிகின்றது.
4. மெல்லக் கற்கும் பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்ல வேண்டும். பிரத்தியேக வகுப்புக்கள் பிள்ளைகளுக்கான தொடர்ச்சியான கற்றலுக்கு வழிவகுக்கும் என்பதனை 58% பெற்றோர்களும் 53% மாணவர்களும் வழங்கிய தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

விதந்துரைப்புக்கள்

1. சிறந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வளங்களின் பிரயோகம் அவசியமாகின்றன. அந்த வகையில் மெல்ல கற்கும் மாணவர்கள் கற்றலினை மேற்கொள்வதற்கு பின்னிற்பவர்கள் மாணவர்களுக்குத் தேவையான வளங்கள் கிடைக்காதபோது கற்றலை கைவிடும் நிலை தோன்றிவிடும். ஆகையால் மெல்ல கற்கும் மாணவர்களுக்கு கற்றலுக்கு தேவையான வளங்களை பெற்றுக்கொடுப்பதற்கு பெற்றோர்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.
2. பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்களை பெற முடியாத சந்தர்ப்பங்களில் உதவிபுரியும் நிறுவனங்கள், சமய ஸ்தாபனங்கள் மூலமாக உதவியினை பெற்று பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொடுக்க முடியும்.
3. பெற்றோர் தமது மெல்லக் கற்கும் பிள்ளைகளின் கற்றல் குறைபாடுகளை மாத்திரம் சுட்டிக்காட்டுதலை தவிர்க்கவேண்டும். பிள்ளைகளின் திறமைகளை அடையாளம் கண்டு நிறைகளையும் கூறுதல் மூலம் மெல்லக் கற்கும் பிள்ளைகள் தவறுகளை திருத்தம் செய்வதற்கு முயற்சிப்பார்கள்.
4. தேவைக்கு ஏற்பவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்பவும் பெற்றோர் அரவணைப்புஇ வழிகாட்டல், ஆதரவினை வழங்குதல் வேண்டும். அத்துடன் அதிக கோபம், வெறுப்புணர்வு முதலியவற்றை அதிகமாக பிள்ளைகளிடம் வெளிக்காட்டும் போது பிள்ளைகள் மனச்சோர்வடைவர். பெற்றோர் பிள்ளைகள் மீது அன்பு, அரவணைப்பினையும் பொருத்தமான வகையில் கண்டிப்பினையும் வழங்குதல் வேண்டும்

உசாத்துணைகள்

1. அருள்மொழி, செ. 2017. கற்பித்தலுக்கான உளவியல், துர்க்கா அச்சகம், மட்டக்களப்பு.
2. மகேசன், ஏ. 2010. விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், ஹிரா அச்சகம், மட்டக்களப்பு.
3. சந்திரசேகரம், சோ. 2007. சமகால கல்வி முறைகளில் சில பரிமாணங்கள், சேமமடு பதிப்பகம், கொழும்பு,
4. Appaji korikana.(2020). Slow Lerners a universal problem & providing Educational opportunities to them to be a successful learner, International journals of social, Vol: 6.

5. Hartini,A.(2017). Learning Strategies for slow learners using the project based learning model in school, journals pendikan Inklusi, Vol:1.
6. Kalpana,M.(2018). Role of teachers & parents in honing their hidden talent of slow learners, International journal of advanced Research in Education & Technology, Vol: 5.
7. Vidya,S.(2014). A study of parent child relationship Among slow learners in higher secondary schools in Tiruchirapali city, journal of social science, Vol: 4.
8. Appana,R. (2018). Role of teacher & parents in education slow learners, International journals of Advanced research in education, Vol: 5.
9. Dalia zahanika. (2021). challenges facting family caregivers of children with Disability during covid-19 Pendamic in Palestinians, journal of primary care and community health, vol: 12.
10. Christine, P.(2011). Slow learners: their psychology & educational programs Ronald press, vol: 8.